STC 308/2018 ம.சா.1 ஜப்ருல்லா பாஷா த/பெ.அமானுல்லா பாஷா வயது 47

**சாட்சி மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நாள் : 03.04.19

நேரம் : 12.28 PM

நான் எது வரை படித்துள்ளேன் என்றால் இளநிலை அறிவியல் (வேதியியல்) படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும், எழுத தெரியாது. முதல் விசாரணையில் என்னென்ன வார்த்தைகள் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஜாப்ராபாத் நெடுஞ்சாலையில் அப்சார் இன்பக்ட் என்ற தோல் கம்பெனி நடத்தி வருவதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி என்னிடம் ரூ.8,11,871/- க்கு வியாபாரம் செய்வதற்கான ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் ரூ.8,11,871/- தர வேண்டுமென்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காசோலையை தான் தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் ரூ.1,91,000/- வாங்கியதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரசீது எழுதி கொடுத்துள்ளார். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரி எனக்கு ரூ.6,20,871/- தர வேண்டுமென்பதற்காக ஆவணங்களோ, வழக்கறிஞர் அறிவிப்போ அனுப்பினேனா என்றால் இல்லை. எனக்கும் எதிரிக்கும் வியாபாரம் ரீதியாக ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இம்தியாசை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இம்தியாசை எனக்கு தெரியும் என்றும், அவர் எனக்கு உறவினர் என்பதால் இந்த வழக்கை அவர் மூலமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளிடம் ரூ.8,11,871/- வியாபாரம் செய்ததை என்னுடைய வருமான வரி கணக்கில் சொல்லியுள்ளேனா என்றால் காட்டியிருக்கலாம், தற்போது எனக்கு ஞாபகமில்லை. எதிரிகள் எனக்கு ரூ.90,000/-க்கு காசோலை கொடுத்ததாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ரூ.90,000/- வழங்க கோரியும் ரூ.6,11,871/- கொடுக்க கோரியும் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு ரூ.90,000/-க்கு காசோலைக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் 14.05.2018 அன்று எதிரிகள் இந்த காசோலையை வங்கியில் செலுத்தி பெற்று கொள்ள சொன்னது உண்மை என்றால் சரியல்ல. எந்த தேதியில் இந்த காசோலை திருப்பபட்டது என்றால் 15.05.2018 அன்று காசோலை பணம் இல்லாமல் திருப்பபட்டது. எதிரிகள் பஞ்சாப் நேஷ்னல் வங்கியில் வைத்துள்ள எந்த வகையான கணக்கு என்றால் நடப்பு கணக்கு ஆகும். மேற்படி நேஷ்னல் வங்கி தனியார் வங்கியா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நடப்பு கணக்கை மேற்படி வங்கியில் வைத்திக்க வேண்டுமென்றால் குறைந்த பட்சமாக ரூ.50,000/- கணக்கில் இருப்பு வைத்திருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 15.05.2018 அன்று காசோலை திருப்பபட்டது சம்மந்தமாக எதிரிக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. அந்த காசோலை திருப்பபட்டது சம்மந்தமாக எதிரிகளிடம் நான் கேட்டதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. 25.05.2018 அன்று மீண்டும் காசோலையை வங்கியில் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அப்பொழுது அந்த காசோலையை தாக்கல் செய்த போது எந்த காரணத்திற்காக திருப்பபட்டது என்றால் கணக்கு முடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்த விவரங்களை என்னுடைய அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் 30.06.2018 அன்று

அனுப்பிய அறிவிப்பில் சொல்லியுள்ளேன். இந்த அறிவிப்பை நான் எந்தெந்த இடத்திற்கு அனுப்பினேன் என்றால் சென்னை சேலையூரில் உள்ள எதிரிகளின் பிரதான அலுவலகத்திற்கும், பெரியமேட்டில் உள்ள கிளை அலுவலகத்திற்கும், எதிரியின் வழக்கறிஞருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினேன். 30.06.2018 அன்று நான் அனுப்பிய அறிவிப்பில் ரு.90,000/-க்கு ஆன பணத்தை கொடுத்து செல்லுடன் காசோலையை திரும்ப பெற்று கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.05.2018 அன்று காசோலை திருப்பபட்டதற்கான சங்கதிகள் என்னுடைய அறிவிப்பில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் வங்கி கணக்கு இன்றைய தேதி வரை நடைமுறையில் உள்ளது என்றால் குறிப்பிட்ட ஒரு மாதத்தில் எதிரியின் வங்கி கணக்கு முடக்கப்பட்டிருக்கலாம். ஒரு முறை வங்கி கணக்கு முடக்கப்பட்டால் புதியதாக தான் வங்கி கணக்கு தொடங்கப்படும் என்றால் சரியல்ல. அது குறித்து வங்கியில் தான் கேட்க வேண்டும். நான் கொடுத்த 30.06.2018 தேதி அறிவிப்பிக்கு எதிரிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள், அதில் என்ன விவரம் உள்ளது என்றால் பொய் என்று தெரிவித்தார்கள். 09.04.2018ல் நான் ரு.30,000/- எதிரியிடமிருந்து பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு வியாபாரம் செய்தது ரு.30,000/- என்றும் அதை கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் செய்த வியாபாரத்திற்கு என்னிடம் கொடுத்து விட்டதாகவும் , அந்த காசோலையை 2 நாட்களில் நான் எதிரியிடம் திருப்பி தருவதாக சொன்னேன் என்றால் சரியல்ல. இதற்கிடையில் எனக்கும், எதிரிகளுக்கும் மோதல் ஏற்பட்ட காரணத்தினால் அந்த தேதியிலிருந்து இன்று வரை நான் எதிரிகளிடம் எந்தவிதமான வியாபாரம் செய்யவில்லை என்றால் சரியல்ல. இம்தியாசுடன் சேர்ந்து கொண்டு தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இம்தியாஸ் யார் என்பதே தெரியாது. தற்பொழுது சாட்சி இம்தியாஸ் என்பவரை நான் பார்த்திருக்கிறேன், பேசியிருக்கிறேன், இந்த வழக்கிற்கும் அவருக்கும் சம்மந்தம் இல்லை. இம்தியாசுக்கும் எனக்கும் பல வருடம் பழக்கம் உள்ளது என்றும் அவருடைய தூண்டுதலின் பேரில் தான் இந்த வழக்கை எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வியாபாரம் ரீதியில் எதிரியுடன் செய்த வியாபாரம் செய்த கணக்கினை தாக்கல் செய்தால் தான் இந்த விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. எதிரிளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

12.51 PM